**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2024-ம் ஆண்டு ஜனவரி மாதம் 18-ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு 1-ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திருமதி.சர்மிளா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாலசுப்பிரமணியன் | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**18.1.2024 OS No. 47/2020 வா.சா.1 பாலசுப்பிரமணியன் ஆஜர்**
**முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ஆம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்கு மூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். பிராமண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். 23.1.2012ம் தேதியிட்ட வள்ளியப்பனுக்கு நான் எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் இணையவழிபதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பட்டா எண்.1376-ல் என் பெயருக்கு கொடுக்கப்பட் கணினி பட்டா இணையவழிபதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கணினி பட்டா வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 11.1.2018ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**2.** 9.6.2020-ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** திருப்புவனம் துணை வேளாண்மை அலுவலர் எனக்கு அளித்த தென்னை சாகுபடி விவசாயி அடையாள அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(அடையாள அட்டை வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 12.12.2016ம் தேதியிட்டு மானாமதுரை தேசிய நெடுஞ்சாலை தனிவட்டாட்சியர் அனுப்பிய குறிப்பாணை அசல் தாக்கல் செய்கிறேன்.**(குறிப்பாணை வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 13.2.2012ம் தேதியிட்டு 1-ம் பிரதிவாதி முத்தையா என்பவரிடம் கிரையம் வாங்கிய கிரைய ஆவணம் இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**3.** தாவா சொத்திற்கு 1426 முதல் 1431 வரையிலான சாகுபடி அடங்கல் கணக்கு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(சாகுபடி அடங்கல் கணக்கு வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** நான் நிலஎடுப்பு தனிவட்டாட்சியருக்கு கொடுத்த மனு புகைப்பட நகல் மற்றும் அஞ்சல் ரசீது தாக்கல் செய்கிறேன். **(மனு மற்றும் அஞ்சல் ரசீது வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மாண்புமிகு.சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளை WP(MD) No.24772/2022 -ல் 28.11.2022ம் தேதியிட்ட உத்தரவு இணையவழி பதிவிறக்க நகல் தாக்கல் செய்கிறேன். **(உத்தரவு வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** இந்நீதிமன்ற

மு.வ.எண்.19/2020 தீர்ப்புரை சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தீர்ப்புரை வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** தாவா சொத்தின் புலவரைபடம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(புலவரைபடம் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**4.** **11.1.2012**-ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** 9.6.2020ம் தேதியிட்ட வரி ரசீது அசல் தாக்கல் செய்கிறேன். **(வரி ரசீது வா.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** திருப்புவனம் துணை வேளாண்மை அலுவலர் எனக்கு அளித்த தென்னை சாகுபடி விவசாயி அடையாள அட்டை அசல் தாக்கல் செய்கிறேன். **(அடையாள அட்டை வா.சா.ஆ.15 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate,
Thiruppuvanam.